IN THE COURT OF THE II-ADDITIONAL DISTRICT COURT, ARAKKONAM. RANIPET DISTRICT.

DEPOSITION OF WITNESS
SC.No.116/2025 - PW-1

Name	திரு.ஆனந்தன்
Husband/Father Name	வரதாஜலு
Village /Area	வேட்டாங்குளம்
Taluk	நெமிலி
Occupation	அரசு பேருந்து ஓட்டுநர் ஓய்வு
Age	62
Religion	

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of 23.03.2026.

(எதிரி ஆஜர்).

முதல் விசாரணை :

நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன். 02.11.2021 அன்று ஆற்காட்டிலிருந்து சோளிங்கர் நோக்கி TN23 N1814 தடம் எண்.3C பேருந்தை நடை எடுத்து வரும் போது ஜம்புகுளம் கூட்ரோடு அடுத்து SKV Matriculation பள்ளி அருகே இரவு சுமார் 10 மணியளவில் ரோட்டின் ஓரம் இருந்த புளியமரத்தின் பின்புறத்திலிருந்து திடீரென அடையாளம் தெரியாத ஒரு நபர் நாங்கள் ஓட்டி வந்த பேருந்தின் முன்பக்க கண்ணாடி மீது கல்லால் அடித்தார். அப்போது பேருந்தின் முன்பக்க கண்ணாடி உடைந்து விட்டது. நான் என்னுடைய உயர் அதிகாரிகளுக்கு தகவல் தெரிவித்துவிட்டு முன்பக்கம் கண்ணாடி உடைந்த பேருந்தை பணிமனையில் நிறுத்திவிட்டு மறுநாள் காலையில் கொண்டபாளையம் காவல் நிலையத்துக்கு சென்று இது குறித்து புகார் கொடுத்தேன். புகார் கொடுக்கும் போது புகாரில் பேருந்தின் கண்ணாடியை உடைத்த நபரின் அடையாளம் முகவரி தெரியாது என புகார் கொடுத்திருந்தேன். பின் சம்பவ இடத்துக்கு சென்று அக்கம் பக்கத்தில் இருந்தவர்களை விசாரித்த போது பேருந்தின் முன்பக்க கண்ணாடியை உடைத்தவர் ஆனந்தன் மகன் பாண்டியன் என்பது தெரிய வந்தது. இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தனர். நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படும் புகாரிலுள்ள கையெழுத்து என்னுடையது தான். அது **அ.த.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>

எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர் ஆகாததால் குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.

<u>மறு விசாரணை :</u> **இல்லை.**

Jayamangalam Sudhakaran

II Additional District Judge, Arakkonam
Digitally signed by Jayamangalam Sudhakaran
Date: 2026.03.23 18:52:14 +0530

II Additional District and Sessions Judge,
Arakkonam.